இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தன்னிச்சையாக செயல்பட்டு, உயர் அதிகாரிகளின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து உற்பத்திக் குறைவினை ஏற்படுத்தி தொடர் நஷ்டத்தினை உருவாக்கி வந்த காரணத்தால், இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுய உதவிக் குழுவைச் சார்ந்தவர்கள் முயற்சி செய்தால் நடத்தலாமா என்று கேட்டிருக்கிறார். தற்சமயம் TANSILK நிறுவனத்தின் சார்பில், அரசாணை எண் 311, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆணையின்படி, ஆண்டு ஒன்றுக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் குத்தகை அடிப்படையிலே 1994-ல் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டமைப்பின் மூலம் முயற்சி செய்வாரேயானால்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழு பெண்களின் கூட்டமைப்பு சார்பிலே, இதுபோன்ற முயற்சிகளைச் செய்வார்களேயானால்—நிச்சயமாக, அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 189, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

189—

கட்டட வசதி

***3662—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் போதுமான வகுப்பறைகள் இன்றி அவதியுறுவதால் கூடுதலாக வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் ரூ.6.60 இலட்சம் செலவில் கட்ட அரசாணை (3ப) எண் 20, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-2004-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சீர்காழி தொகுதியில் கொண்டல் கிராமத்தில், ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. போதிய வகுப்பறைக் கட்டடங்கள் இல்லாமல், வசதிக் குறைவாக இருக்கிறது. சென்ற ஆண்டில் இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தபோதிலும், இன்னும் அதிகமான வகுப்பறைக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. எலத்தூர், பனங்காட்டாங்குடி, குமாரகுடி, தேனூர் மற்றும் வள்ளுவகுடி போன்ற பகுதிகளில் ஆதிதிராவிட மக்கள் கிராமங்களைச் சுற்றிலும் அதிகம் வசிக்கின்றனர். இப்பள்ளி மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித் தனியாகத் தங்கும் விடுதிகள் நவீன முறையில் வசதியாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளி சிறப்பான முறையில் செயல்படுவதாலும், தங்கும் விடுதிகள் போதிய வசதிகளுடன் இருப்பதாலும் கடலூர், தஞ்சை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து மாணவ, மாணவிகள் இப்பள்ளியில் வந்து சேர்கிறார்கள். இதனால் வருடா வருடம் பள்ளியில் மாணவ, மாணவிகளின் சேர்க்கை அதிகமாகிக்கொண்டே போகிறது. மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதால், மேலும் இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவும், சென்ற ஆண்டு எனது சீர்காழி தொகுதியிலே ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ள மாதானத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கும், காரைமேட்டில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 மார்ச் 17 முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 1,018 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில், 237 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில், அதிகமான அளவுக்கு மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். கல்வியினுடைய தரமும் உயர்ந்து வருகிறது. அதிகமான அளவுக்கு மாணவ, மாணவிகள் சேர்ந்து வருகின்ற காரணத்தால், 237 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் தேவை என்று கணக்கிடப்பட்டு, நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரையில் 100 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கைக்கு, கூடுதலாக மாணவர்கள் சேர்க்கை அதிகரித்து வருகின்ற பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, வருகின்ற நிதியாண்டில், தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் கூடுதலாக வகுப்பறைகள் கட்டிக்கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் சமுதாய முன்னேற்றத்திற்காக ஆதிதிராவிடர் நலத் துறை, ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றது. இது பாராட்டுதலுக்கு உரியது. அதேசமயம் இந்தத் துறையானது கல்லூரி ஒன்றைக்கூட நடத்தவில்லை. இந்த அரசு புதிய கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கந்தசாமி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

வினா எண் 190, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.